**செய்தி வெளியீடு எண்: 76/2022** **நாள்: 14.08.2022**

**பத்திரிக்கைச் செய்தி**

**விம்கோ நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில்**
**75-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு**
**நாட்டுப்புற கிராமியக் கலை நிகழ்ச்சிகள்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக விம்கோ நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில் இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டை முன்னிட்டு (Azadi ka Amrit Mahostav and Har Ghar Tiranga) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ்நாடு கிராமியக் கலைகள் வளர்ச்சி மையம் மூலம் பல்வேறு கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்த கலை நிகழ்ச்சிகளை விம்கோ நகர் பகுதியை சேர்ந்த பொதுமக்கள், மெட்ரோ பயணிகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் என ஏராளமான கண்டுகளித்தனர்.

மதுரை கலைமாமணி தி.சோமசுந்தரம் குழுவை சார்ந்த 20 பேர் கொண்ட நாட்டுப்புற கலைஞர்கள் பல்வேறு கிராமியக் கலை நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். இதில் கரகாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், காளையாட்டம், சிலம்பாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், தப்பாட்டம், மற்றும் நையாண்டி மேளம் போன்ற கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. நிறைவாக நாளை 15.08.2022 (திங்கள்கிழமை) சுதந்திர தினத்தன்று அசோக் நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில் மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறுகிறது.

நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளை நகர்ப்புற மக்களும் கண்டுகளிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்றைய இளைஞர் சமூதாயத்தின் மூலம் வருங்கால சந்ததியினர் நாட்டுப்புற கலைகளை அறிய வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாட்டுப்புற கிராமியக் கலைஞர்கள் தங்களது தனித்துவம் வாய்ந்த பல்வேறு திறமைகளை இந்நிகழ்ச்சி மூலம் மக்களுக்கு தெரிவித்து வருகிறார்கள். இதன் மூலம் கிராமியக் கலை மேலும் வளர்ச்சிப் பெற உறுதிணையாக இருக்கும். இந்நிகழ்ச்சியை கண்டுகளிக்கும் இன்றைய இளைஞர்களுக்கு நாட்டுப்புற கலைகளை பற்றி கற்றுக்கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

75-வது சுதந்திர தினத்தை ஒட்டி நடைபெறும் இந்த கிராமியக் கலை நிகழ்ச்சிகளை பொதுமக்கள், மெட்ரோ இரயில் பயணியர் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் கண்டு மகிழ சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளதை மாலை 6 மணி முதல் 8 மணி வரை கண்டுகளிக்கலாம். அனைவருக்கும் அனுமதி இலவசம்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**